කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

அறிக்கை இல : 09 MSW/26/10/28/02

நிறம் : ஆம்பர்

கடும் காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் தொடர்பான ஆலோசனை:

இயற்கை அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கை நிலையத்தினால்,

அடுத்த 12 மணித்தியாலங்களுக்கு செல்லுபடியாகும் வகையில்

2026 ஒக்டோபர் 28ஆம் திகதி பிற்பகல் 09.00 மணியில் வெளியிடப்பட்டது.

ஆழம் கூடிய வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு:

தயவுசெய்து அவதானமாக இருக்கவும்!

வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக நிலை கொண்டிருந்த "ஒர்னாப்" (Arnab) என்ற மிகப் பாரிய புயலானது, இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தின் கரையைக் கடந்து, ஒரு புயலாக வலுவிழந்துள்ளது. இத் தொகுதி இன்று, ஒக்டோபர் 28ஆம் திகதி பிற்பகல் 5.30 மணிக்கு ஆந்திரப் பிரதேசத்தின் கரையோரப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்ததுடன், வட அகலாங்கு 17.0^0 N இற்கும் கிழக்கு நெட்டாங்கு 81.7^0 E இற்கும் அருகில் மையம் கொண்டிருந்தது.

இத் தொகுதி அடுத்த 24 மணித்தியாலங்களில் பெரும்பாலும் வடக்கு - வடமேற்குத் திசையில் நகரக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், படிப்படியாக வலுவிழக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. அது இன்று இரவு 11.30 மணியளவில் ஒரு ஆழமான தாழமுக்கமாக மேலும் வலுவிழக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.


கீழே வரைபடத்தில் "ஆலோசனை" ("Advisory") என்ற வகையில் காட்டப்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 55-65 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், அக் கடற்பரப்புகள் கொந்தளிப்பாக அல்லது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ஆழம் கூடிய தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளில் பலநாள் மீன்பிடிக் கலங்களுக்கும் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் விடுக்கப்பட்ட எச்சரிக்கை மீளப் பெறப் படுகின்றது.

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

Warning for Fishing and Naval Communities.
Issued at 09.00 p.m. on 28 October 2026. Valid for the period until 09.00 a.m. 29 October 2026.



மேற்குறிப்பிட்ட கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுவதோடு, இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் மற்றும் முன்னறிவிப்புகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.


කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

அதன் தீவிரம் மற்றும் அமைவிடம் தொடர்பான முன்னறிவிப்பு:

திகதி	நேரம்	நிலை (Lat ^{0}N/ Long ^{0}E)	சூறாவளி தளம்பல் வகை
28.10.2026	பி.ப 11.30	17.5/81.7	ஆழமான தாழமுக்கம்
29.10.2026	மு.ப 05.30	18.2/81.7	தாழமுக்கம்
29.10.2026	மு.ப 11.30	19.0/81.8	தாழமுக்கம்
29.10.2026	பி.ப 05.30	20.0/81.9	நன்கமைந்த குறைந்த அழுத்தப் பிரதேசம்

அதன் பாதை தொடர்பான அவதானிப்பு மற்றும் முன்னறிவிப்பு



Source : https://rsmcnewdelhi.imd.gov.in/